## UNIVERSITY OF PERADENIYA

## CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

**ශාස්ත්‍රවේදී උපාධි (බාහිර - නව නිර්දේශය) පරීක්ෂණය 100 මට්ටම - 2020**

**கலைத்தேர்வுப் பரீட்சை (வெளிவாரி–புதிய பாடத்திட்டம்) 100 வது தேர்ச்சி மட்டம்**

**Bachelor of Arts (External - New Syllabus) Examination 100 Level - 2020**

# தமிழ்

## SUPE 106 - தமிழ் எழுத்தாற்றல்

## WRITING SKILLS IN TAMIL

සියලුම ප්‍රශ්න වලට පිළිතුරු සපයන්න.
சகல வினாக்களுக்கும் விடையளிக்க.
Answer all questions.

එක් පිළිතුරක් සඳහා වූ පිටු ගණන 4කට සීමාවේ
ஒரு வினாவிற்கு 4 பக்களுக்குள் விடையளிக்க.
Page limit per question is 04

නොපැහැදිලි අත් අකුරුවලට ලකුණු කපනු ලැබේ.
எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.
Candidate will be penalized for illegible handwriting.

මෙම ප්‍රශ්න පත්‍රයේ අඩංගු ප්‍රශ්න සංඛ්‍යාව 05 කි.
,ந்த வினாப்பத்திரத்தில் 05 வினாக்கள் உள்ளன.
There are 05 questions in the question paper.

---

01. பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 200 – 250 சொற்களில் கட்டுரை எழுதுக.

அ). ஊடக அறமும் வெகுஜன ஊடகமும்

ஆ). பாடசாலைக் கல்வி முறையில் பிரத்தியேக வகுப்புக்களின் தாக்கம்

இ). இலங்கையில் போதைப்பொருள் வபாவனையும் சமூகச் சீரழிவும்

ஈ). சுகாதாரத்திற்கான சவால்களும் அறிவியலின் மீதான நம்பிக்கைச் சரிவும்

உ). பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்

ம.பு.பா.

02. பின்வரும் உரைப் பகுதியை 50 சொற்களுக்குள் சுருக்கி எழுதுக.

உலகில் எத்தனையோ மொழிகள் வழங்குகின்றன. திருந்திய மொழிகள் - திருந்தாத மொழிகள் அல்லது பண்பட்ட மொழிகள் - பண்படாத மொழிகள் அல்லது இலக்கிய வளமுள்ள மொழிகள் - இலக்கிய வளமில்லாத மொழிகள் என அவை வகுக்கப்படுதலுண்டு. மொழிகளின் தொகை இன்னும் கணக்கெடுக்கப்படவில்லை. பல நாடுகளிலுள்ள பின்தங்கிய ஒதுக்குபுறப் பிரதேசங்களில், வெவ்வேறு மொழி பேசும் மக்கட் கூட்டங்கள் காணப்படுகின்றன. அமெரிக்காவில் பூர்வ குடிகள் பேசிய மொழிகள் பல நூற்றுக்கணக்கின. பூர்வகுடிகளின் பண்படாத மொழிகளைக் கற்கப்போயே, ஐக்கிய அமெரிக்க நாடுகளில் மொழியியல் சிறப்பாக வளர்ச்சியடைந்தது. ஆபிரிக்காவிலும் மக்கள் பேசும் மொழிகள் பல. இன்று அவை கற்கப்படுகின்றன மொழிக்குடும்பங்களாக வகுக்கப்படுகின்றன. ஐரோப்பியர் தொடர்பினால், ஆபிரிக்க மொழிகள் பல எழுத்து வடிவம் பெற்றனளூ இலக்கிய வளமும் அடைந்தன. அவற்றுள் சில இன்று வேகமாக வளர்ச்சியடைகின்றன.

வரலாற்றுப் போக்கிலே, மொழிகளின் தொகை பெருகுகின்றதா அல்லது குறைகின்றதா என்பது ஒரு வினா. இரண்டும் நடைபெறுகின்றன என்று கூறலாம். அமெரிக்கா, அவுஸ்திரேலியா முதலிய கண்டங்களில் பூர்வீக மொழிகள், குடியேறி ஆதிக்கம் பெற்ற ஐரோப்பியர் மொழிகளின் செல்வாக்குக்கு எதிர்நிற்கலாற்றாது அழிகின்றன. பல மொழிகள் அழியச் சில மொழிகள் செல்வாக்குப் பெறுவதற்கு, இது ஓர் எடுத்துக்காட்டு. போக்குவரத்து வசதிகள் மிகக் குறைந்து காணப்பட்ட பண்டைக் காலத்தில், ஒரு மொழி பேசும் மக்கள் பல இடங்களில் பிரிந்து வதிந்ததால் அல்லது பல இடங்களுக்குப் பிரிந்து சென்றதால், ஒரு மொழி பல மொழிகளாக விருத்தியடைதலுமுண்டு.

இத்தகைய விருத்திதான், மொழிக்குடும்பத்துக்குத் தோற்றுவாயாகின்றது. ஒரு மூலமொழி பல தனிப்பட்ட மொழிகளாகப் பிரிந்த நிலையிலும், அம்மொழிகளில் பொதுப்பண்புகள் பல காணப்படுமாயின், அவை ஒரு மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தன எனப்படும். மொழிக்குடும்பம் எவ்வாறு தோன்றியது, அதாவது ஒரு மூல மொழி பேசும் மக்கள் எவ்வாறு பிரிந்து நின்று பல மொழிகளைத் தோற்றுவித்தனர் என்ற வரலாறு முன்பு எங்குங் குறிப்பிட்டு வைக்கப்படவில்லை. இன்றுள்ள சான்றுகளைக் கொண்டே, அத்தகைய மொழி வரலாறு இன்று கணிக்கப்படுகின்றது. சொற்களில் ஒற்றுமை, இலக்கண அமைப்பில் ஒற்றுமை, எண்ணுப்பெயர், மூவிடப்பெயர்களில் ஒற்றுமை என்பன ஆராய்ந்தறியப்பட்டுப் பின்பு மொழிக்குடும்பம் வகுக்கப்படுகின்றது.

ம.ப.பா.

03. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

உற்பத்தி முறைதான் சமூக வளர்ச்சிக்குப் பின்னாலிருக்கின்ற திட்டவட்டமான சக்தி என்றால், உழைக்கும் மக்களின் பெருவாரியான மக்கள்திரள், அதாவது பொருளாதார மதிப்புக்களை உற்பத்தி செய்யக்கூடியவர்களாக இருப்பதால், அவர்கள் உற்பத்தியில் தீர்மானமான சக்தியாக இருப்பதால், வரலாற்றிலும் தீர்மானமான பாத்திரத்தை வகிக்கிறவர்களாக இருக்கிறார்கள். வரலாறு தனிமனிதர்களால் படைக்கப்பட்டதல்ல. மாறாக, உழைக்கும் மக்களால் உருவாக்கப்பட்டதாகும். மார்க்சியத்துக்கு முந்தைய சமூக இயல், மனிதச் செயலுக்கு பொருளுற்பத்திதான் தீர்மானமான சக்தி எனப் பார்க்கவில்லைளு அது சமூக வளர்ச்சியில் வகிக்கின்ற முக்கியத்துவத்தையும் காட்டுவதாக இருக்கவில்லை. இதனால்தான் உழைக்கும் பெருவாரி மக்கள் திரளினுடைய பாத்திரத்தைப் புரிந்துகொள்ளத் தவறிவிட்டது. பொருள் மதிப்புக்களை உற்பத்தி செய்கிறவர்களும் உற்பத்தியை முன்னுக்குக் கொண்டு செல்கிறவர்களும்தான் வரலாற்றை உண்மையில் படைக்கிறவர்கள் என்ற விடயத்தையும் அவர்கள் பார்க்கத் தவறினார்கள். வரலாறு என்பது மன்னர்களின் அரண்மனைகளிலும், அல்லது குடியரசு தலைவர்களின் அலுவலகங்களிலும் மந்திரிகளின் பங்களாக்களிலும், அல்லது பெரிய நாடாளுமன்றக் கட்டடங்களிலும் படைக்கப்படுவது இல்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, அது சுரங்கங்களில், குழிகளில், தொழிற்சாலை மட்டத்தில், கட்டடங்களை நிர்மாணிக்கும் இடங்களில், விவசாயப் பண்ணைகளில் - பொருள் உற்பத்தித் துறைகளில் தீர்மானிக்கப்படுகின்றது. பெருவாரி உழைக்கும் மக்கள்திரள்தான் சமூக மாற்றங்களுக்கான தீர்மானமான சக்தியாகும். மக்களே இல்லாத மன்னனும் படைவீரர்கள் இல்லாத தளபதியும் எதற்குச் சமம் ஆவார்கள்? பெருவாரியான மக்கள் திரள், வரலாற்றின் ஒவ்வொரு திரும்பு முனையின்போதும், கடைசியாகத் தீர்மானிப்பவர்களாகவே இருந்து வந்துள்ளனர். எல்லாப் பெரும் புரட்சிகளும் பெருவாரி உழைக்கும் மக்கள் திரளாலேயே நடத்தப்பட்டிருக்கின்றன. பெருவாரி மக்கள் திரளின் இயக்கம், ஏதோ சாதாரணமான, போகிற போக்கில் மாறுகின்ற வி'யங்களால் தீர்மானிக்கப்படாமல் மிக ஆழமான, நீண்டகால பொருள்முதல் காரணங்களால் தீர்மானிக்கப்படுகின்றது.

அ). இவ்வுரைப்பகுதியின் பிரதான கருத்து யாது?

ஆ). மார்க்சியத்துக்கு முன்னைய சமூக இயல், உழைக்கும் மக்கள் திரளினுடைய வகிபாகத்தைச் சரியாகப் புரிந்துகொள்ளத் தவறியது ஏன்?

ம.ப.பா.

இ). பெருவாரியான மக்கள் திரளின் இயக்கம் எதனால் தீர்மானிக்கப்படுகின்றது?

ஈ). வரலாறு யாரால், எங்கே உற்பத்தியாக்கப்படுகின்றது?

உ). உரைப்பகுதியின் சுருக்கத்தை இருபத்தைந்து சொற்களில் எழுதுக.

04. I. பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான நிறுத்தக் குறியீடுகளை இட்டு, வாக்கியங்களை மீள எழுதுக.

01. பாத்திமா மிகச்சிறப்பாக வரைவாள் ஆனால் அவளுக்கு நிறந்தீட்டத் தெரியாது

02. இலக்கியக் கல்வியின் பயன் யாது இலக்கியத்தை ஏன் கற்க வேண்டும் இலக்கியத்துக்கும் சமூகத்துக்கும் இடையிலான உறவு எத்தகையது ஆகிய வினாக்களை இலக்கிய மாணவர்கள் கட்டாயம் அறிந்திருக்க வேண்டும்

03. பல்கலைக்கழக மாணவர்களிடம் இருக்க வேண்டியவை பல்துறை வாசிப்பு நுண்ணறிவு சுயஆளுமை

04. ஐ ம ச கட்சியின் தலைவர் ஐ நா சபையில் உரையாற்றவுள்ளார்

05. புனைகதை இலக்கிய வடிவத்தில் கதை Story கதைப்பின்னல் Plot ஆகியன முக்கியமான எண்ணக்கருக்களாக விளங்குகின்றன

II. பின்வரும் வாக்கியங்களில் காணப்படும் வழுக்களையும் மயக்கங்களையும் சுட்டிக்காட்டி, வாக்கியங்களைத் திருத்தி எழுதுக.

அ). இது ஒரு கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரமாகும்.

ஆ). ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையங்களிலும் காவலர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இ). அவன் இரவில் இடியப்பமோ அல்லது பிட்டோ சாப்பிடுவான்.

ஈ). ஆண்டுதோறும் மறைந்த விபுலானந்தர் நினைவான நினைவுப் பேருரை நிகழ்த்தப்படுகின்றது.

ம.ப.பா.

உ). வீட்டிலுள்ள பெண்கள் கூறிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு, நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

05. நமது சுற்றுச்சூழல் இன்று பல்வேறு வகைகளில் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றது. அப்பாதிப்புக்களைத் தடுத்துநிறுத்தி, சூழலைப் பாதுகாக்க வேண்டியது எம் ஒவ்வொருவரினதும் கடமையாகும். உமது பிரதேசத்தில் இடம்பெற்றுவருகின்ற சுற்றுச்சூழல் அழிப்புச் செயற்பாடொன்றைத் தடுத்து நிறுத்தக்கோரி, மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஆணையாளருக்கு 150 சொற்களில் கடிதமொன்று எழுதுக.

06. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினுக்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

அ). மொழிக்கல்வியின் முக்கியத்துவம்

ஆ). அறிவியல் தமிழ்

இ). பேச்சு வழக்கும் எழுத்து வழக்கும்

ஈ). கலைச்சொற்கள்